உ

கடவுள்துணை.

# குணவாகடம்.

திருமூலநாயனார்

அகஸ்தியமகாமுனிவர்

தேரையர்

இவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய பிண்டோற்பத்திமுதல்
வந்தனுபவிக்கும் நோய்களின் குணங்களும்
நாடிப்பரிக்ஷைகளும் கியாழவகைகளும்
ஆகிய பாடல்கள் - ௪௨௧.

இஃது

களத்தூர்த் தமிழ்ப்புலவர்
வேதகிரிமுதலியார் - குமாரர்
ஆறுமுகமுதலியாரால்
பரிசோதித்து

அ. வீராசாமிநாயுடு
அவர்களால்
தமது
சற்குணநிதி யச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

௧௮௭௧௵ - அக்டோபர்௴.

# விளம்பரம்.

—※—

இதனால் சகலருக்குந் தெரிவிப்பதுயாதெனில்
னபட்டணம் ஸ்ரீங்கான்சவைடக்கடுத்த பாபன்றோ
ராஅசு - வது நெம்பருளடைய புத்தகஷாப்பிலும்,
கோணம் பெரியகடைத்தெருவிலிருக்கும் உப்புக
நாராயணசாமிநாயக்கரிடத்திலும், மதுரை புதும
பத்தில் புத்தகவியாபாரஞ்செய்யும் சண்முகபிள்ளை
த்திலும், திரிசிரபுரம் சேரடிக்கடைத்தெருவிலிருக்
கி. சபாபதிபிள்ளையிடத்திலும், பாலக்காட்டில் ஷாப்
டைவைத்திருக்கும் அப்பாவுபிள்ளையிடத்திலும், பல
தமிழ்கிரந்தங்களும், அகஸ்தியர்முதலிய பெரியோர்
திருவாய்மலர்ந்தருளிய வைத்தியசாஸ்திரங்களும் - ஸ்ரீ
வாராதிகள் அருளிச்செய்த திவ்வியப்பிரபந்தங்களும்,
பராமாயணவசனமும், சில சோதிடசாஸ்திரங்களும்
ண்டியவர்கள் விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

இப்போது நூதனமாயச்சிட்டிருக்கும்

புத்தகங்கள்.

மரணகண்டியென்னும்-ஜோதிஷசாஸ்திரம்.
நவக்கிரகசிந்தாமணியென்னும்-ஜாதகசூடாமணி.
தமயந்திநாடகம்.
மதுரைவீரநாடகம்.
மன்மதநாடகம்.
போகர்நிகண்டு ௧௨௦௦.
மேற்படிநிகண்டு-௫௦௦.

அச்சிட்டுவரும் புத்தகங்கள்.

ஸ்ரீராமர்மகாவிந்தம்
கணிதாமிர்தமென்னும் ஜோதிஷசாஸ்திரம்.
சுப்பிரமணியர்மெய்ஞ்ஞானம்
தேரையர்பெருநூல்காவியம்
தன்வந்திரிதைலம்
அஸ்வனிதேவர்வைத்தியம்

இங்ஙனம்.

அ. வீராசாமிநாயுடு

உ

கடவுள் துணை.

# குணவாகடத்திரட்டு.

## திருமூலநாயனார்

அருளிய

## வாகடம்-௱௨௰.

---

### விநாயகர் துதி.

அந்தி நிறத்தனை யானை முகத்தனை... ......*
இந்து இளம்பிறை போலு மெயிற்றனை ...*
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தனை......*
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.. *

---

### தேவி துதி.

தாதாவைப்போலத் தயவுகொடுப்பவள்... .......... ...*
வேதாகமத்தின் மெய்ஞ்ஞான மெய்ப்பொருள்.........*
ஆதாரசத்தி அரியமனோன்மணி........ ...... .........*
மாதாவின்பாதம் வைத்தேனென் சென்னியில் ... (உ)

## கர்ப்பவுற்பத்தி.

செனியில்வைத்தே திருநந்தித்தாளினை, மன்னியகாயம்வ
வகையால், கன்னிவகுத்தகருப்பத்திருமந்திரம், உன்னியுணர்தே
ருநூற்றிருபதே

உடலுற்றவாறும் உயிருற்றவாறும், மடையுற்றவொடபண்ட
சலின்வாறும், திடமுற்றதத்துவ சிவபுலன்களும், உடலுற்றநீர்
கண்டகருவிதே

கருவைவயொழிந்தவர் கண்டநன்மூவேழும், புருஷனு
பொழிந்ததுமற்றொன்றும், தெரிவைக்கருக்குழி தேயுவுபுகுந்
ருவமிரண்டாயோடிவிழுந்ததே.

விழுந்ததுலிங்கம்விரிந்ததுயோனி, ஒழிந்ததுமுதலைந்து
டேதி, தெழிந்ததுஅப்புதேற்றுங்குணமும், பொழிந்துபுகுந்த
ணர்கின்றபோதே.

போகின்றதெட்டும் புகுகின்றபத்தெட்டும், ஆகின்றமுற்
ம் ஒன்பதுவாசலும், நாகனுமெட்டும் நான்கிரவிமதியும், பாக
டாவிடிற்படர்ந்தனலாமே

ஏறஎதிர்க்கில் இனலயன்தானுகும், நேரொக்கவாகில்நிகர்பே
ந்தானுகும், மாறஎதிர்க்கில்மறையவன்தானுகும், பேறுத்தலை
னும்பேரரசானுமே.

ஆண்மிகிலாணும்பெண்மிகிற்பெண்ணும், பூணும்இரவ
ன்றிப்பொருந்தில்அலியாகுந், தாண்மிகவாயில் தரணிமுழுதா
பாண்மைமிகுந்திடிற்பாய்ந்ததுமில்லையே.

## வயதுண்டாங்காரணம்.

பாய்ந்துமுன்னேந்தோடிர்பாராயுளுநூறும், பாய்ந்துபின்னே
தோடிற்பார்வயதைம்பதாம், பாய்ந்திடும்வாயு பகுத்தறிந்திவ்வண
பாய்ந்திடும்யோகிக்குப்பாய்ச்சலுமாமே. (

## அங்கயீனம்.

பாய்கின்றவாயுகுறுகிற்குறளனும், பாய்கின்றவாயுவளையின்மு
மாகும், பாய்கின்றவாயுநடுப்படிற்கூனுகும், பாய்கின்றவாயு மாதாக்
லைபார்க்கிலே. (

## மந்தன் ஊமை குருடன்

மாதாவுதரம்மலமிகில்மந்தனும், மாதாவுதரஞ்சலமிக ஊமையா
ம், மாதாவுதரத்திரண்டொக்கிற்கண்ணில்லை,மாதாவுதரத்திில்வந்தகுழ
விக்கே. (௰க)

## ஆண்பெண்-அலி இரட்டைப்பேறு

குழவியும் ஆணும் வலத்தாதுவாகில், குழவியும் பெண்ணும் இடத்தாதுவாகில், குழவியும் இரண்டாம் அபானனெதுக்கில், குழவியும் அலியாங் கொண்டகாலொக்கிலே. (௰௨)

கொண்டநல்வாயு இருவர்க்குமொண்டிடில், கொண்டகுழவியும் கோமளமாய்விடும், கொண்டஇவ்வாயுகுறிப்பறிந்திவ்வகை, கொண்டதுமில்லை கோலமுன்னுதே (௰௩)

## பஞ்ச-பூத-பிண்டோற் பத்தி.

உன்னிபசர்ப்பக்குதியாம்வெளியிலே, பன்னியநாதம் பகர்ந்தபிருதுவி, வன்னியும்வாயுவு மாயிறுஞ்சுக்கிலம், மன்னியசமனாய் வளர்க்கும் உதகமே. (௰௪)

உதகமுதிரம் உறுங்கனல்வாயுவால், சிதகுறுமங்கங்கள் செய்து மூடித்திடும், பதகுறுமுரோமம் பகர்தசைஅஸ்தி, நிதகுறுமொன்பது வாசலும்நீங்குமே. (௰௫)

நீங்கிடநீங்கிட நிமிர்ந்துவளர்ந்தோங்கும். ஓங்கிடஓங்கிட உறுதியாம்வாயுவும், வாங்கிடவாங்கிட வன்னிதலைக்கொளும், பாங்கிடப்பாங்கிடப் பத்தாகுந்திங்களே. (௰௬)

## பிறக்கும்போதே நோயும்பிறந்தது.

திங்கள்பத்தாகித் தேய்வொடுவாயுசேர்ந், தங்கிமலர்த்தியமனியாய்க்கீழ்நோக்கிப், பொங்கிப்பிறந்தநாள் புகழ்வார்வெழவீணர், தங்கிச்செனிக்கையிற் றுநோயுமுற்றதே. (௰௭)

## மூலநாடி- ௭௨௲-த்தில்-தசநாடி.

உற்பவிபாம் உறுதியாமெந்நந்தி, பற்றியமூலம் பகர்ந்திடும் நாடிதான், எற்றியெண்ணிடில் எழுபத்திராயிரம், மற்றதிற்பத்து வளமானநாடியே. (௰௮)

## தசநாடியில் தசவாயுவும் திரிநாடியும்

### ௩-சக்கரம்-௩-மண்டலம்

வளமானபத்தில் வழங்குந்தசவாயு, உளமாம் இடைபின்சுழியெனமூன்றுண்டு, தளமானசக்கரம் காட்டியதாறுண்டு, தளமானமண்டலந் தான்மூன்றும்பாருமே. (௰௯)

பாரும்இடைகலை பின்கலைமாதியே, சாரும்பெருவிரற் காலொடு தானேறி, சாருங்கழுத்திற்கபாலவரைநின்றுவாரும், இடமாய்வலக்காஞ்சாருமே. (௨௰)

வலக்கரந்தன்னில் வளமானப்பின்கலை, நிலைக்க இடக்கரம் நின்ற திடைகலை, அலக்கநடுமையஞ் சுழிமுனையோடிடும், பிலக்க இவைமூன்றாம் பிறந்ததுதாதுவே. (௨௧)

மூவகை நாடியில் மூவகைதாது.

தாதுமுறையேதனியிடைவாதமாம், போதுறுபின்கலை புகன்றதுபித்தமாம், மாதுசுழிமுனை வழங்கிடும் ஐயமாம், ஓதுமுறைபார்த்துணர்ந்தவர்சித்தரே (௨௨)

மூவகைவாயுநாடி.

உணர்ந்தஅபானன் உறும்அந்தவாதத்தில்- புணர்ந்தபிராணன் புகும்அந்தப்பித்தத்தில்- அணைந்தசமானன் அடங்குங்கபத்தொடு இணைந்திவைமூன்றுக் கெடுத்தகுறியான்றே (௨௩)

மூவகைநாடியறியும்விபரம்.

குறியாம்வலக்கரங் குவிந்தபெருவிரல், மதிவாயதன்கீழ் வைத்திடுமூவிரல், பிறிவாய்மேலேறிப்பிலத்ததுவாதமாம், அறிவாய்நடுவிரல் அமர்ந்ததுபித்தமே. (௨௪)

பித்தத்தின்கீழே பிரண்டதுஐயமாம்- உற்றுற்றுப்பார்க்க ஓர்நாம்பேயோடும்- பத்தித்தமூவரும் பாய்கின்றவேகத்தால்-மத்தித்தநாளம்போல் வழங்கும்நாம்பிதே. (௨௫)

மூவகைநாடியறியுமாத்திரை.

வழங்கியவாதம்மாத்திரையொன்றாகில்- தழங்கியபித்தந் தன்னிலைவாசி-அழங்குங்கபந்தான் அடங்கியேகாலோடில்-பிழங்கியசீவற்குப்பிசகொன்றுமில்லையே. (௨௬)

மூலவகைநாடிநடப்பு.

இல்லையேவாதம் எழில்நடைகோழியாம்- எல்லையேபித்தம் எழுமீபுந்தவளைபோல்- ஒல்லையேஐயம்ஊர்ந்திடும்பாம்புபோல்- அல்லையேகண்டுஅறிந்தவர்சித்தரே. (௨௭)

வாதபித்தசிலேட்டுமமிருப்பிடம்.

அறிந்திடும்வாதம் அடங்கும்மலத்தினில்- பிறிந்திடும்பித்தம்பேராஞ்சலத்தினில்- மறிந்திடும்ஐயம் வாசிக்கும்விந்துவில் - உறைந்திடும்மூன்றுக்குரவாந்தலமிதே. (௨௮)

உறவாக்கறுப்புஞ்சிவப்புறும் நல்வாதம்- குன்றவானபச்சை பசுமைகொடும்பித்தம்- நிறைவானவெண்மையாய் நின்றதுநல்ஐயம்,மறைவானவர்ணமதாகுந்தலமதே, (௨௯)

## தேகபஞ்சபூதம்.

நலங்காட்டியிந்தச்சடமான ஐம்பூதம் - நிலங்காட்டி நீர்காட்டி நின்றிடுந் தீகாட்டி - வலங்காட்டி வாயுவால் வளர்ந்தே இருந்து - குலங்காட்டிவானிற்குடியாயிருந்ததே- (௨௰)

இருந்த இவ்வைந்தா லெடுத்தவுடம்பிது - பிரிந்திடுமாமிசம் பிருதுவின்மயமாகும், சொரிந்திடுமயிர்தநீர் சொற்குதியப்புவாம்-வருந்தியவன்னி வளமாய்வெதுப்பமே. (௨௰௧)

வெதுப்பத்துடனே விடுபட்டுநாசியில் - எதுப்புற்று நிற்குமிது காணும் வாயுவாம்- கதுப்பொத்து எல்லாங் கபளித் திடமிட்டு- மதுப்பொத்துநிற்கும்வானின்வளப்பமே. (௨௰௨)

வளப்பங்கேள் பூமிவாசிக்கும் நாசியில்-களப்பமாம்வன்னிதானுறுக்கண்ணினில்- அடப்பமாம் அப்புஅடங்கிடும் நாவினில் - பளப்பநல்வாயு பரிசிக்கும் எங்குமே. (௨௰௩)

எங்கியகாதில் இருந்துறும் ஆகாசம் - பொங்கிய தைந்திக்குட்பொல்லாதிம் மூன்றுசான்- தங்கியவாயு சமர்த்தன்மகாவாதம் - பங்கியவன்னியாற் பகுந்தது பித்தமே. (௨௰௪)

பகுந்தசலத்திற் பரிசிக்கும் நல்லையம்- வகுந்தஇம்மூன்றுல்வளர்ந்ததுநோயெலாம் - அகந்தானதிந்து அளவிட்டயோகிகள் - மகிழ்ந்தேயிதில்நின்ற மயக்கம்அறிவரோ. (௨௰௫)

### வாதக்குணம்நோதல்.

அறியஇம் மூன்றின தான்மை சொன்னர் நந்தி- எறியநல்வாதமெறிக்குங் குணங்கேளு- குறியெனக்கைகால் குளைச்சுவிலாச்சந்துபதியெனநொந்துடற்பச்சைசப்புண்ணுகுமே. (௨௰௬)

புண்ணுப்வலிக்கும்பொருமுங்குடலோடி-தண்ணுமலத்தைத்தம்பிக்கும்போக்காது - ஒண்ணுனஆசனம் உரவேசுருக்கிடும்- பண்ணுக்குஞ் சிதம்பகுத்திடும்வாதமே. (௨௰௭)

### பித்தகுணம் கைத்தல்.

பகுத்திடிற்பித்தம் பலபலசிந்தையாம்-வகுத்திடும் வாந்தியும்வாய்நீர்மிசவூறும் - மகுத்திடுமேனியில்மாட்டியெதிப்பேறும் - மிகுத்துதவனிக்கும்மிகவிடங்கைக்குமே. (௨௰௮)

### ஐயகுணம்காய்தல்.

விடங்கியஐயம் மேலினைப்பேற்றிடுந் தடங்கி யிருமிடந்தனிவிலாஇரண்டும்நோம்- அடங்கிச்சுரங்காயும் அளவற்றரோமஞ்சூழ்- இடங்கியுடல்வற்றி யிரத்தமுஞ்சக்குமே. (௨௰௯)

கக்கியமூவர்களிற்பெலன்சேளு - ஒக்கியவாயு வுடல்கூடிடிற்பெலன்- தக்கியவாயுசகலத் துக்காதாரம் - சிக்கியநோயைச் சிறக்கவிளக்குமே. (௬௰)

## தாபச்சுரமும்சீதச்சுரமும்.

விளக்கியவன்னியும் வாயுவுமேற் கொண்டால் - தளக்கியதாபச்சுரங்காணுந்தோஷிராம்- வளக்கிய அப்புவும்வன்னியும்மேற்கொண்டால்- இளக்கியசீதச்சுரங்காணிதன்பேரோ (௬௧)

## தோஷநிறக்குறி

போனதோஷம்பிரக்குமுறைசேளு- வாரணவாதமும் வன்னிகருந்தோஷமாம்- காரானபித்தமுந் தழலூடில்வெண்மையாம் - சோணஐயமும்சிவப்பேழும்வாய்விலே. (௬௨)

வாயுவடங்கினல் வளமானதோஷம்போம் - வாயுவெழும்பினல்மண்ணும்நீரொன்ருகும்- வாய்வுநீரால்வழங்கியவன்னிசாம்-வாயுவுமாகாசம்மண்டலமேவாசையே. (௬௫)

ஓசையிலெழும் ஒளியினிலோணாந்தும் - நாசியில்மூன்றும் நாவினிரண்டும்- தேசியுந்தேசனுஞ்சேர்ந்துபிரிந்திடம் - மாசிலாநந்தி மகிழ்ந்துரைத்தாரோ. (௬௪)

## ஓராண்டிலும்மீராண்டிலும்சாகுங்குறி.

- உரைத்த துநாசியுறு நிக்குறிகேள்-விரைத்திடப்பின்கலைவிடாதோடில்மூன்றுநாள்- இரைத்தசடம் ஆண்டில்எய்திடுமாகாசம் - பாதியிரண்டிநாட்பாயில்மீராண்டெண்ணே. (௬௫)

## மூவாண்டிலும ஆறுதிங்களிலும்சாகுங்குறி,

எண்ணிமயாருநாளியங்கிடிற்பின்கலை- தண்ணியமூவாண்டிற்தப்பாதுமாரணம் - ஒன்ணியுப்பயத்தில் ஓடிடிற்பத்துநாள் - மண்ணில்மதியாதில்மரிப்பான்குறியிதே. (௬௬)

## நாள்மூன்றிலும் பதினைந்திலும் சாகுங்குறி.

குறிகேளுமூக்கன்றி குலவிவாய்வழியோடில், மதிகேளு மூன்றுநாள் மரித்திடுவன்தப்பாது - தெறிகேளுமும்மலமுந் திரண்டுமிகக்குறைந்துவரில்- பரிவாகும்பட்சத்திற்பா ருயிர்தான்தப்பாதே. (௭௪)

## சி திங்களிலும் உடனேயும்-சாகுங்குறி

தப்பாதுவாய்நீர் தான்தாக்கிற்றன்மேல்விழிலே- ஒப்பாகத் தனுமறைய வொழிந்திடுவன்மதியாதில்- செப்பாகத்தானிருக்க சேர்ந்த நிழலைந்திடினும்- அப்பாரேள்சாவுநிச மறிந்துகற்பங்கொண்டிடே. ()

௯. நாளிற்சாகும்மரணதோஷக்குறி.

கொண்டிடுந்தோஷக் குறிசொன்னொந்நம்பி, தண்டுட்உகடுந் தளிப்பல்லும்நாக்கொன்றும். மண்டிடுந்தாதுவள மாய்க்கறுப்பேறில், ஒண்டிடும்ஆறுநாளுறுதியாய்ச்சாவானே (௪௯)

ஒரு-மாதத்திற்சாகுங்குறி.

உறுதியாம்பித்தம் உடம்புஇளைப்பதாம், பொறுதியாய்த் தூலிக்கிற்போவான்மதியொன்றில், அறுதியாம்ஐயம்அஸ்தியுலர்ந்து, உறுதியோர்மதியிலொடுங்கிடுஞ்சிவனே (௫௰)

சாகாக்குறியும்-சாகுங்குறியும்.

சிவகளையாய்ச்சேர்ந்திடும்நாடியில், ஆவக்கரம்வைத்தழுத்திடின்மேலேறும், தாவொத்துமேல்நோக்கிச் சாகாதொருநாளும், பாவொத்துக்கீழ்நோக்கிற் பதையாமற்சாவானே (௫௧)

அமிர்தம்உண்டும்சாகுதல்.

பதைக்கின்றமூவரிற் பக்குவந்தப்பியே, நிதைக்கின்றவாதமும் பித்தமும்நீங்கிடில், சுதைக்கொண்டிருந்தாலுந் தோற்றியவுயிர்விடும் பிதைக்கொண்டவாத பித்தமும்பெலனுமே (௫௨)

பிணியரிடம்போகாக்குறி-கிட்டாக்குறி-மருந்தீ-குறி,

பித்தமும்அடங்கினாற்பேசாதேபோய்விடும், எத்தியஐயம் எழும்பிடிற்கிட்டாதே, எத்தியவாதம்எழும்பில்மருந்துசெய்து, எத்தியிம்மூன்றின் இயல்பையறிந்திடே (௫௩)

சாகாக்குறி-சாகுங்குறி.

அறிந்திடும்மூன்றும் அடங்கியேமுட்டிலும், எறிந்துமிகவோடிலும் எய்தாதுசாவுதான், பறிந்துநற்றூது பற்றற்றுக்கீழ்நோக்கில், மறிந்தேயுயிர்சென்று மறலிகைப்புக்குமே (௫௪)

மகாதோஷக்குறி.

புக்கியுந்தியிற்கை பொருந்தஒருவிரல், எக்கிஉயரம் எழும்பில்மகாதோஷம், அக்கியஉந்திதா னாதாரம்வாய்விற்கு, வைக்குந்தலைமென வகுத்தனர்தாதிதே (௫௫)

தசநாடிகள்இருப்பிடம்.

தாதுமூறைகேள் தனித்தகுதிச்சந்து, ஓதுறுகாமயம் உந்திநடுமார்பு, காதுநெடுமூக்குகண்டமகரம்புருவம், போதுறும்உச்சி புகழ்பத்தும்பார்த்திடே (௫௬)

சாகாக்குறி-சாகுங்குறி.

பார்க்கிற்றசநாடிபதைப்புண்டாய்நின்றிடில், சேர்க்கிற்சிலநாளிருப்பான்இறந்திடான், காக்கிடுங்காமியம் சழன்றுசுழித்தோடில், ஆர்க்கிலெமனால் கடைவதுவுண்மையே (௫௭)

### உயிர்நீர்க்குதியாற் சாவு.

உண்மைகேளின்னும் உமுந்திடநோயுள்ளோன், தண்மையாய்த் தூரம்போய்த் தாக்கிடிற்சாவில்லை, கண்மையாம்வாயு கழன்றிடிற் கெட் டிடும், வண்மையாய்ப்பார்க்க வகுத்தனர் நந்தியே (௫௮)

### வாயுநோய்-சுரம்-திரிதோஷம்.

வகுத்தமுறைப்படி மந்தத்தால்வாயுவாம், மிகுத்தநல்வாயுவால் விளைந்திடும்நோயெலாம், பகுத்திவையிரண்டாற் பாரச்சுரமுறும், மு குத்திவைமூன்றால் முத்தோஷங்காணுமே (௫௯)

### மந்தம்வருகுதல்.

காணுமேமந்தங் கவளிக்கும்அன்னத்தால், காணுமேமந்தங் க டுமாமிசம்மீதில், காணுமேமந்தங்கலந்தமாப்பண்டத்தால், காணுமே மந்தங்கடுமே,நெய்ப்பாலுக்கே (௬௰)

மேவியஅன்னத்தால் விளங்கியஇச்சடம், பாவியேகொன்றுபழி யுறும்அன்னந்தான், ஆவில்மிதந்தப்பில் ஐயுற்றுநோயாகும், காவிலி லைவயெல்லாங்கண்டுகொளன்னமே (௬௧)

அன்னம்பிறந்தது அனைத்துவிதையிலும், மன்னியவெட்டை ம காசீதயிரண்டினால், பன்னியதிந்திதைப்பார்ப்பார்பெரியோர்கள், கன் னிமயக்கத்தாற்கண்டிடும்மேகமே (௬௨)

### மேகம்பிறக்குவிதம்.

மேகம்பிறந்தவிதஞ்சொன்னொந்நந்தி, ஆசமிளந்தைப் பருவ மதில்மோகித்துப், போகந்தினஞ்செய்யில்புகழ்மந்தத்தேகூடில், வா கப்பசியால் வழங்குஞ்சையோகமே (௬௩)

சையோகஞ்செய்யத்தணித்தசுழியோடும், ஐயாஅமிர்தம் அடங் கிக்கனலேறும், மெய்யாகவிந்துவிழவிழப்புண்ணாகும், மையானமே கம் வளருங்கிரந்தியே. (௬௪)

### சீமேகம்-வாயுகுலை-பலமேகம்-பலநோய்.

கிரந்தியிரணங்கிளர்ந்திடுஞ்சீமேகம், உரைந்திவையிரண்டாலுறு வாய்வுகுலையாம், பரந்ததிவைமூன்றாற்பலபலமேகங்கள், தாந்திவை தொட்டுஞ் சூழ்நோய்களுற்றதே (௬௫)

### இலங்கணமிடுதல்.

உற்றசுரத்துக்கும் உறுதியாய்வாய்வுக்குப், அற்றேவருமட்டும் அ ன்னத்தைக்காட்டாதே, முற்றக்கனல்ராசாமூனவழியேவரில், ஒத்தே கிறைந்தோடி லொன்றுக்குமஞ்சாதே (௬௬)

### காய சித்தியாக.

அன்றியுகத்திலழியாமற்காயந்தான், மின்றிபகற்பம்விளம்பினேம்நூற்றெட்டு, தன்றமுறவேதான் றின்னவல்லோர்க்கு, பஞ்சநனைப் போய்ப் பதிந்தோங்கிவாழ்வரே. (௬௭)

வளமானபித்தத்தில் மருவிக்கபங்கூடில், தளமானவாயுவாற் றனேவெதுப்பேறி, காமானகன்னத்திற் கட்டியேமூலமாம், உளமாஞ்சாத்தி லுழலுகின்றவாயுவே (௬௮)

### மலசலக்கட்டு மேல்மூச்சு இரணம் உருத்திரவாயு.

வாயுவினாலேமலசலங்கட்டும், வாயுவினாலேவாங்கிடும்மேல்மூச்சு, வாயுவினாலேமலருமிரணங்கள், வாயுவினாலே வரும்ருத்திரரோகமே.

### பேசிக்கொண்டிருக்கையிற்சாகுதல்.

ரோகங்கபத்தில் நூழைந்தேதிவாயுதான், வாகுற்றநெஞ்சில்வலித்தேமயக்கிடும், போகுற்றபித்தத்தைபோகாமற்றம்பித்து, பாகுற்றுப்பேசையிற் பதையாமற்கொல்லுமே (௭௰)

### சுஜன்னிவருங்காரணம்.

பதமாஞ்சுகசன்னிபாயும்விதங்கேளு, நிதமாகமூழ்கிநிறையவே சாப்பிட்டு, குதமாசமந்தத்திற்கூடிடில்வாயுவால், அதமாமனுபோகம் அணைந்திடிற்சன்னியே (௭௧)

### வியர்வைகண் சிவப்புமாதோஷம்காயமழிதல்.

சன்னிசுகத்தினாற்றானேறும்வியர்வைதான், கன்னிசுகத்தினாற் கண்கள்சிவப்பேறும், வன்னிசுகத்தினால்வழக்குட்மகாதோஷம், அன்னசுகத்தினா லழிந்திடுங்காயமே (௭௨)

### மூலம்வருங்காரணம்.

காயத்தில்மூலங்கண்டவிதங்கேளு, பாயொத்ததிபனம் பரிந்தேயடக்கினும், மாயைமயக்கமலத்தையடக்கினும், ஓயுற்றக்குண்டலி குட்புகும்வாயுவே (௭௩)

### முளைமூலம்.

வாயுபுகுந்தமலத்தோலிபானத்லதத், தேயுவைக்கூட்டி இட்டிக்கருக்கிடும், தோயும்மலம்வரிற்கருக்கிமுன்னேநின்று, ஆயுமுளைபோலபானலிருக்குமே (௭௪)

### இரத்தமூலம்.

இறுக்குஞ்சிலமூலம் எழுமண்டலம்போல, மறுக்கரிணங் கொண்வேருகுஞ்சிலமூலம், உறுக்கியவாயுவா லுதிரமுந்தான்கூடி, தறுக்கிவிழுக்காட்டுந் தான்ரத்தமூலமே (௭௫)

பசிகெடும் விந்துநாசம்இளைச்சலாம்கழிச்சலாம்.

மூலமெழுந்திடில் முன்னேபசிபோகும், மூலமெழுந்திடில் மூ
ன்விந்துநாசமாம், மூலமெழுந்திடில்முழங்கும்இளைச்சல்தான், மூல
மெழுந்திடில் முழுபாக்கழிச்சலே (௭௬)

கிராணிக்கழிச்சலில்- ஆறுவிதம்.

கழிச்சல்கிராணிக்கழியும்விதங்கேளு, அழிச்சிபபித்தம் அனல்
வாதம்ஐயமாய், செழிச்சியவாயு சேர்ந்திவைமூன்றால், பழிச்செனப்
பேதிக்கும் பார்பெலம்போகுமே (௭௭)

பெலமானமேகத்திற் பிறந்ததொருபேதி, குலமான மூலத்திற்
கொடியதொருபேதி, சலமானவாயுவாற்சக்கித்தொருபேதி, வலமான
ஆறும் வகுத்தமுறையாமே (௭௮)

பித்தமேகநிறக்குறி.

முறையானமேகம் முழங்குமிருபதுந், துறையான தெல்லாஞ்
சொன்னேனந்நந்தி, கறையாருஞ்சீலையிற் கண்டிடில்மஞ்சள்போல் ப
றையானபித்தத்தாற் படுகின்றமேகமே (௭௯)

வாதமேக ஐயமேக நிறக்குறி.

படுகின்றசீலைதான் பாங்காம்வெளுப்பாகில், அடுகின்றவாதத்தா
லாகுங்காணம்மேகம், மடுகுங்கபீனத்தில் மயில்நிறம்போற்பட்டால்,
விடுகின்றஐயத்தால் விழுகின்றமேகமே (௮௰)

தமரோரிமேகம்-நீர்த்துளிமேகம்.

மேகமிவைமூன்றில் வெவ்வேறுகுணங்கேளு, வாகியபித்தமும்
வாயுவுங்கூடில், தாகியநாளத் தமரிலெரிந்திடும், போகும் நீர்கட்டிப்
பொசிந்து துளித்தேவிழும் (௮௧)

சிக்காநீர்மேகம்-கல்லெரிப்புமேகம்.

விழுகுஞ்சிலநேரம்விடுபட்டுநீரோடும், ஒழுகியவாய்வும் ஒதுக்கி
னால்நோகாது, வழுகியமந்தத்தால்வாயுவந்தேபுகில், கழுகிமுதிர்ந்திடு
ங் கல்லெரிப்பாகுமே (௮௨)

மேகமிகும்மநீகருகும்தாதுநஷ்டமாம்,

ஆகியவாதமும்வாயுவுங்கூடிடில், தாகியவெள்ளை தடையற்றுமெத்
தவாம், போகியமேனிபொருமிக்கறுப்பேறும், வாகியதாது வழங்கா
துநஷ்டமே (௮௩)

வெளியாக்காறுதெலும்பாயிரும்மிடும்மேகம்.

வழங்கியஐயமும் வாயுவுங்கூடிடில், பிழங்கிபொசியாது பிறவெ
ள்ளைக்காறுது, தழங்கியிளைத்துதித்தானஸ்திபோலாவான், இழங்கிப்பு
கைந்தே யிருமிடும்மேகமே (௮௪)

இருமியபித்தமும் வாதமுங்கூடிடில், மருவச்சலமேகம் வாரிதி போலோடும், உருவம்வேறாக்கும் உண்டஉடற்காய்ந்திடும், உருகவே ஊனோடுதிஞ்சியினிற்குமே. (௮௫)

## மதுமேககுணம்.

இனிக்கின்றவாதத்திடைசேரிலையந்தான், பனிக்கின்றகளூப்ப தனிபொல்நீரோடும், கனிக்கின்றமேனிகனாந்துவெளுப்பேறும், தனிக்குமதுமேகர்த்தப்பாதஜயமே. (௮௬)

## இரத்தமேகம்.

ஐயமும்பித்தமும் அணைந்திடுங்காலத்தில், கொய்யுறுமிரத்தங் கொப்பளிக்குந்தண்டில், மையுறுங்கண்ணாட்குமகத்தாம்பெரும்பாடாம், வையுறும்மேகம்வரிசைமுறைகேளே. (௮௭)

முறைகேட்கிலொன்பது முயர்ச்சியால்வந்து, துறைகேட்கில்கர்ப்பத்தில்துவக்கியமேகங்கேள், நறைபூத்தகொங்கையாள நாயகன் மோகத்தால், மறைபோற்றுங்கர்ப்பத்தில்வளர்ந்ததுமேகமே (௮௮)

வளர்ந்ததுகர்ப்பத்தில் வகுத்தமுறையஞ்சு, உளர்ந்தியஉந்தியிலுற்பத்தியாம்மேகம், அளுந்திப்படும்வெள்ளையாகாச்சுரமேகம், தளர்ந்தியஅஸ்திபைத்தணலாயுருக்குமே. (௮௯)

தணற்காயும்மேகம்தண்ணீர்ப்பகைமேகம், உணக்கால்முழுக்கற்றுவருதுஞ்சிலமேகம், பிணக்கார்பசிகெட்டாற்பெற்றப்பெருமேகம், வணக்காச்சைசயோகத்தால் வருங்கடுமேகமே (௯௰)

கடும்பசிதோன்றிடிற்காணுஞ்சிலமேகம், அடுவுற்ரபாஷாணத்தாலாஞ்சிலமேகம், அடுவுற்றினாயேழுமஞ்சுமுன்றென்பதும், எடுவுற்றிருபத்தொன்றேற்றினர்மேகமே. (௯௧)

## பித்தகுன்மம்.

ஏற்றியகுன்மம் எழுந்தவிதங்கேளு, தோற்றியபித்தமும்வாயுவுந்தொந்திக்கில், சேற்றியஅன்னஞ்செறிக்கில்வலிப்பேறும், மாற்றியநீரூறிவாந்தியாம்பாருமே. (௯௨)

## வாதகுன்மம்.

பாருமேவாதமும்வாயுவுங்கூடிடில், ஒருமேகும்பியிலுழன்றமிகநோகும், கோருமேகுத்தாக்குடலைமுறுக்கிடும், வாருமேவாதத்தில்வழங்கியகுன்மமே (௯௩)

### ஐயகுன்மம்.

விழங்கியஐயமும்வாயுவுங்கூடிடில், தழங்கிய அன்னத்தைச்சந்திக்கவொட்டாது, புழங்கிய அன்னம்புளிப்புக்கொடுத்தேறி, உழங்கிமுறுக்கியு—லைவலிக்குமே. (௬௪)

### மேககுன்மநோய்.

வலிக்கியமேகமும்வாயுவுங்கூடிடில், பலிக்கியமலசலம் பதையாமற்கட்டிடும், இலக்கிய இடப்புறம்இயல்பாம்வலப்புறம், வலிக்கும்முறுக்குக்கும்வருஞ்சூலைக்குன்மமே. (௬௫)

குன்மமிவைநாலில்கூறிடுமொண்விதம், வன்மையாநோய்க்குமகாநோய்காண்பொல்லாது, கன்மமேசெய்தகடத்துக்கிதுவெய்தும், நன்மையாந்தர்மஞ்செய்நாடோர்க்கும்வாராதே. (௬௬)

### பித்தசூலைநோய்.

நாட்டியபித்தமாம்சூலைமுறைசேரு. மாட்டியஅன்னம்ருசிகெட்டுவாந்தியாம், ஆட்டியகைகாலதன்சந்து பின்தண்டு, நீட்டிவலித்து நிலையாயெரியுமே. (௬௭)

### வாதசூலைநோய்.

நிலையானவாதத்தில் நின்றிடுஞ்சூலைதான், சூலையானகைகாற்குளைச்செல்லாம்புண்போல், கலையாய்வலித்துகனத்திடுங்கீழ்வயிறு, தலையானமேனிதானிளைத்திடுமே. (௬௮)

### ஐயசூலைநோய்.

இளைத்திடும்மேனியிருமிவறண்டிடும், குளைத்திடுங்கைகாற்குத்திமிகநோகும், தளைத்திடும்மார்பிற்சளிமிகத்தாக்கிடும், அளைத்திடும்ஐயத்தாலாகாதசூலையே. (௬௯)

### வாதபித்த சூலைநோய்,

ஆகாதவாதமும்பித்தமுஞ்சூலையாய், வாகானகைகால் வளமாய்க்கரடேறும், தாகானமேனிதனில்வெடிப்புண்ணுகும், போகாமல்நின்றபுணர்ச்சியாய்க்கொல்லுமே. (௭௰)

### ஐயபித்தசூலைநோய்

கொல்லியஐயமும்பித்தமுங்கூடிடில், மல்லியெலும்பில் வளமாய்த்துளைத்துநோம், அல்லிச்சுரங்காயும்அதிகத்தாபமுமாகும், எல்லியிருமிடும் இதுகாணுஞ்சூலையே. (௭௧)

### ஐயவாதகுலைநோய்.

காணுமேஐயத்திற்கணவாதகுலை கேள், பூணுங்கபாலம்புடைத்துவெடித்திடும், ஆணிமுலையாம்அடங்காக்குளிர்சுரம், பேணியெலும் பெலாம் பெலங்கெட்டுநோமாறே (௰௨)

ஆறுவகைகுலையிலறுமூன்றுபேர்சொல்வார், வேறுஇதையல்லால் வெவ்வேறும்ஒன்றில்லை, கூறமிதனுமங்கோடிகுணஞ்சொல்வார்,பேழமறகுலைப்பேர்சொன்னார்நந்தியே (௰௩)

### ஆறுவிதசர்ப்பநோயால் ஸ்ரீமலடு.

நந்தியுணர்ந்ததநலமானசற்பத்தில், அந்தியநோய்தான் அறுவகைகேளு, புத்தியில்வாயுவுந்தேயுவுங்கூடிடில், மந்திமலடாவாள்மரணவணக்கென்னே. (௰௪)

### மலட்டுப்புழுவால்மலடு

வளையான்கர்ப்பத்தில் மலட்டுப்புழுவில், விளையாஞ்சுக்கிலத்தைவிளைந்ததுவுண்டிடும், களையாமலடியாங்காணதைப்போக்கிடில், துளையான பிள்ளைச்சுகமாய்ச்செனிக்குமே. (௰௫)

செனிக்கின்றபிள்ளைத்திறமாய்பிறக்கையில், கனிக்கின்றசிநீர்சலந் கள்ளேசிக்கிடில், பனிக்கின்றகைகால்பாவியேகுத்திடும், தனிக்கும் பசிபோகுந் தான்வயிறும்பாரிப்பே. (௰௬)

பாரியவாய்வுபரிந்துசுழிப்புகில், தாரிக்கழிந்தசதநித்தங் கூப்பிடும், வாரியுடம்பெலாம்வலிக்கும்இடைநோகும், ஆரியன்சொன்னதிந்தவர்சித்தரே (௰௭)

சித்தரணசர்ப்பத்திற்சேர்த்திடுமிரத்தந்தான், மத்தாயுருண்டுவாயுபோலோடிடும், உற்றபசிபோகும்உழன்றேயிளைந்திடும், வர்ணச்சுழிச்சலாம்வன்குதகவாய்வே. (௰௮)

குகிரணமாமிசம் சுழித்திடிற்கர்ப்பத்தில், வாதானமேகத்தால்வழங்கிச்செனிப்பிக்கும், போதாமுடம்பெலாம் புண்போல்மிகநோகும், நீதாமயக்கமாய் நிர்ச்சீவனுவளே. (௰௯)

ஆய்கின்றநோய்களறுவிதங்காண்கர்ப்பத்தில், பாசொன்திறின்றுரற்பலியாதுகர்ப்பந்தான், வாகின்றதைப்போக்கில் மலடிபெறும்பிள்ளை, ஆய்கின்றநோய்க்கெலா மறைந்தமுறைபாரே. (௨௰)

## கர்ப்பச்சன்னிகுணம்.

அறைந்திடச்சன்னிகளாகாதுகர்ப்பத்தில், இறைந்திடுஞ்சியிறுட்புகும்வாயுவால், விறைந்துமிகவியர்க்கும் மெய்யில்மயக்கமாந், துறந்திடுபேற்கிட்டுஞ்சோம்பிக்கும்பாருமே. (௱௰௧)

பாருமேபெண்தான்பச்சுடம்பாங்காலம், தாருமணுபோகந்சனிகாடியுண்ணுதல், ஆருக்குமாரப்பண்டமாகாதுமாங்கனி, கோருமேகொண்டிடிற் கொல்டிடுஞ்சன்னியே. (௱௰௨)

கொண்டமலடிக்குக் கூதிநிஞ்சன்னிதான், மண்டியிருக்கைஃயில் மாத்தின்பாள்மோருண்பாள், தண்டிடணைவள்தனிச்சுருக்காய்தின்பாள், ஒண்டியபெண்களுக்கோரொட்டுச்சன்னியே (௱௰௩)

ஓரொட்டுச்சன்னியுழண்டதுபெண்ணுக்ரும், வாரொட்டிஆணுக்குஞ்மகர்காஞ்சுகன்னி, நேரிட்டுப்பார்க்கில்நிகழ்ந்ததுவெவ்வேறு, பாரொட்டுமெய்ச்சபருத்தமுறைபபரே. (௱௰௩)

## கண்ணில்நோய்வருதல்.

டாரோபொடிச்சுடல் பருவெயில்மேற்படல், வாரோறு கொங்கையாள்மாலையமிகச்செய்யல், காரோமுழுக்கறல் கண்ணுல னல்பார்க்கல் சீரோறுபாஷாணந் தின்றதாற்கண்ணோயே. (௱௰௫)

கண்ணோய்வருகின்ற காரணம் இன்னுங்கேள்பண்ணுணமோகத்தார்பருவெட்டைவாயுவால், தண்ணும்மலசுகட்டால்தன்சலக்கட்டினுல் புல்ணுமிரணத்திற் போகேங்காரத்தாலே (௱௰௬)

காரச்சுறுக்கால் கடுமிரசத்தூமத்தால், நேரொத்தசாரம்நிறைமூக்கின்வாசத்தால், பாரொத்தபேதியால் பலபலதண்ணீரால். சீரொத்த கண்ணிற்சிறக்கும்வியாதியே. (௱௰௭)

## குட்டநோய்பதினெட்டானகாரணம்.

வியாதியின்மூவாறுவிளங்கியகுட்டங்கேள், சுயாதிக்கிரந்தசுழல் மேகத்தாலாறும், பயாதியமண்ணுணிப் பல்வண்டினுலெட்டு நியாதிப்புழுநாலுமாய்தின்திரதக்குஷ்டமே. (௱௰௮)

## கண்ணோய்திருமருந்து.

இந்துப்புத்திப்பிலியியல்பீதரோசணி, நந்திப் பூச்சாற்றில்நயந்து அரைத்திட அந்தகன்கண்ணுக்கருந்ததிதோன்றிடும். நந்திக்குநாதன்நயந்துவுரைத்ததே. (௱௰௯)

### சுரம்-தோஷம்-சன்னி-வாயு-சர்ப்பகுலைதீர.

உரைத்தசுரம்போமுறவானதோஷம்போம், விரைத்திடுசன்னிபோம் மேலானவாயுபோம், பாத்தியசர்ப்பத்தில்பாய்கின்றகுலைபோம், குரைத்தநற்குதக்குருக்கூட்டிப்பார்த்திடே. (௱௨௰)

### மேகநோயிருபத்தொன்றுந்தீர.

பார்த்திடும்மேகம்பகரிருபத்தொன்றும், போற்றிடுமப்பிரகம்போகிவாணசிந்தூரம்,சேர்த்திடுஞ்சிந்திற்செவ்வாஞ்சருக்கரை, மாற்றிடுவெண்ணெயில்மாமேகம்போகுமே (௱௨௧)

### குன்மம்-குஷ்டம்-கிராணி-மூலந்தீர.

போகுமேகுன்மம்புகட்டத்திராவகம், போகுமேகுஷ்டம்புகட்டச்செயகெந்தி, போகுமேகிராணிபுகட்டநற்பூநாகம், போகுமேமூலம் புகழ்சங்கைச்செம்புக்கே. (௱௨௨)

சங்கைகேள்நோய்தான்தனித்தநாலாயிரம், சங்கைகேள்நானூறுநாற்பத்தெட்டென்பர்காண், சங்கைகேளிவளவுந் தானுடலிலுண்டாகில், சங்கைகேளெல்லாந்தவிடுபொடியாமே. (௱௨௩)

### சகலநோய்களுந்தீரகுருச்செந்தூரம்,

பொடியாநோய்போகப்புகன்றிட்டாரெந்தநந்தி, மடிவானகுதம்பகத்தானதக்கமும், பிடிவானகெந்தியின்பேரானசத்து, குடியாய்ச்சிந்தூரித்துக்கூட்டியேதின்றிடே. (௱௨௪)

தின்றிடநோயெலாந்திசைகெட்டேயோடிடும்,பன்றிடவாயுவுடக்கத்திற்சோராது, தன்றிட லோகர்க்குத்தானுகாதிம்முறை, மன்றிடசித்தர்க்காய் மாவியாதிபோகவே (௱௨௫)

வியாதிகள்போகவெகுதாட்சட்டமுற, பயாதித்திரைநரைபாங்காய்த்தவிர்ந்திட, கயாதிக்கவனங்கலந்தெக்குஞ்சுற்றிட, அயாதியஞானமஞ்சாகுஞ்சித்தியே. (௱௨௬)

## திருமூலநாயனார்

அருளிய

## வாகடம்-முற்றிற்று.

# சிவமயம்.

# அகஸ்தியமகாமுனிவர்

அருளிய

# குணவாகடம்-௱சுயடல்

# வயித்தியசாரம்-ஙசு

கணபதி தோத்திரம்.

வெண்பா.

சொல்லும்வயித்தியசாரசூக்ஷமநூல்முப்பத்தாறு
யல்லும்பகலும்அறிவுணர-நல்லக்
குணபதியாம்பூரணத்திற்கூடியேவாழுங்
கணபதியின்பாதமலர்காப்பு.

மருந்துகொடுக்கக்கூடாதபேர்கள்.

அன்னியபரஸ்திரீசங்கக்கபடனேனன் ஆனகஞ்சாகள்ளுலெலாட்டிஅபின்மருந்த,தன்னியகுணியக்காரன்சண்டைக்காரன்தருர்புள்ளிவிருந்துண்பான்குருடன்துஷ்டன்,குன்னியநித்திரைமிகுத்தோன்கொடாதலோபி குணமில்லான்பக்தியில்லான் மானமில்லான், பன்னியபண்டிதர்பகையன் செவிடன்ஊமை பாசுபதம்அறியானைப்பார்க்கொணாதே.

முன்னேபணம்வாங்கிக்கொண்டுபின்னே
வைத்தியஞ் செய்யவும்.

கைக்கூலி கைபொப்புக்களவின்கூலி கபடமனமூலைமாதர்வேசிகூலி, மெய்க்கூலிகண்கூலிவித்தைக்கூலி வியாபாரக்கூலிமிக வுடையான்கூலி, ஒப்பரியபிணிதீர்க்கும் ஒருவன்கூலி ஓதுவிக்கும்உபாத்தியாரவர்தன்கூலி, அப்போதைக்கப்போதேவாங்காராகில் ஆர்பெறுவாரார்தருவாரவணிமீதே. (௨)

துஷ்டர்களுக்கிம்மூன் றுஞ் சொல்லக்கூடாது.

மந்திரமும்வாகடமும்பழையநூலும் வருவிக்கும்பெரியோரோவளமைகேளீர், தந்திரமாய்க்காந்தமுகம் ஊசிபற்றுந் தன்மையதுபோற்றுடர்ந்து தரிப்பாராகில், சுந்திரமாய்ப்புகழுடைய குலமானாலும் துஷ்டர்களுக்கிம்மூன் றுஞ்சொன்னாராகில், அந்தரமாயெழுநரகிலழுந்திப்பின்னும்அறிவிலாச்சண்டாளராவார்பாரோ (௩)

### இந்நான்குவகைகளும் அறியாமல்வயித்தியஞ் செய்பவர்களுக்குநரகம் வரும்.

பார்க்கின்றசோதிடப்பிராயகாலம் பகரும்விபகாரமொடுபிராயச்சித்தம், எற்றும்வயித்தியம்இவைகள் நான்கும்வல்லோர் இதன்வழியேசிகிச்சைரக்ஷைசெய்வாராகில், ஆர்க்குமேதோஷமில்லை யிவைகளையறியாதார்சாஸ்திரவல்லவர்கள்போல, தீர்க்கமடிபிடியாகச்செய்வாராகில்சிவபிரமத்திவதைசேர்வாரென்னே (௪)

### கண்கள்-௩-தலைகள்-௪-முகங்கள்-௫-கைகள்-௬-சரீரங்கள்-௮ கால்கள்-௰- இந்தஅறுவிதகுணங்களறியார் ரோகிகளைக்கொன்றதனால் நரகமடைவார்.

வாதகுறிவயித்தியரேசொல்லக்கேளீர் வாகாககண்மூன்றுதலைகள் நான்கு. நீசமுடன்முகங்களைந்துகைகளாறு நிலைசரீரங்களெட்டு கால்கள்பத்து, விதம்இதன்பயனறிந்தார் வியாதிதீர்ப்பார் விதம்அறியார்மானிடரைப்பழியேசெய்வார், சேதமாஞ்செய்மருந்துபலித்திடாது செத்தபின்புதீநரகிற்சேருவாரே. (௫)

### கண்-தலை-கை-சரீரம்-கால்-பிண்டநிலைவிபாகங்கள்.

மருந்தகசுத்திகுணம்நிகண்டுகண்கள்மூன்றாம், வாதபித்தசிலேட்டுமதொந்தர்தலைகள்நான்காம், அருந்துமறுசுவையறிதல்கைகளாறும் அஷ்டவிதக்குறியறிதல்சரீரம்எட்டாம், இருந்தகசநாடிதசவாய்வீரண்டும் இதமாகப்பார்த்திடிற்கால்கள் பத்தாம், பொருந்தியதோர்பிண்டநிலைமுகங்களைந்தாம் பொதிகைமலையகஸ்தியனார் புகன்றவாறே (௬)

வாகடத்தின்பயனறியார்நாடிகாணார் வளர்கையைப்பிடித்திழுத்துவார்த்தைசொல்வார், ஆகடியமாகவேநல்லோர்தம்மை அசாத்தியநோயோவென்று அறைந்துபோவார், பேர்கிடைக்கப்பேர்சொலுவார்வியாதிக்கு பிணிதீர்ப்போமென்றுசொல்வார் தீர்க்கமாட்டார், ஓகோகோவயித்தியர்தா மென்றுசொல்வார்க் கொருக்காலும்மோட்சமில்லைநரகந்தானே (௭)

அச்சமறவயித்தியரேநோயுள்ளோர்க்கு அசாத்தியமுஞ்சாத்தியமும்அறிந்துநன்றாய், பட்சமறக்குறிகுணம்மெய்ப்பரீக்ஷைபார்த்து பரிகாரமாய்மருந்துபகராராகில், தச்சமறக் கிளைகுலங்கள் வே

# குணவாகடம்.

ரோடற்று தாணிதனில்வெகுபாவந் தலைமேற்கொண்டு, இச்சைபெறவெருநரகி லழுந்திப்பின்னும் ஈடேற்றம் இல்லாமல் இருப்பர்தானே. (௮)

தாணிதனிலவுஷதத்தின் சுத்திகண்டு தகைகமைபெற நோயாளி சரீரப்பார்த்து, வாதியாசனவகையுங்கண்டுபின்னுங் கைப்பரீட்சை மெய்ப்பரீட்சைகருதம்நாடி, திரிகரில்குருமுகமாய்ப் புத்தியாகித் தெளிந்தோர்கள் யோசனையுஞ்செய்துகேட்டு, முராணியினுலிந்தவகைசெய்யாராகில்சூழவேழுசுற்றமும்வேரற்றுப்போமே. (௯)

கருத்தறவேவாதிமகன் வயித்தியஞ்செய்யில் கசடறவேநோயாளிகுருவாயெண்ணி, கருத்தறவேமருந்தக்குப்பத்திவேணுங் கைகண்டவயித்தியனையறிந்துநன்றாய், கருத்தறவேமனதவர நடக்கவேணுங் கழுதையைப்போலிருந்தவர்க்குப் பலியாதென்றார், கருத்தறவேயிவையறியச்சித்தர்தானுங் காட்டினாவர்மனப்போல் நடந்துகொள்ளே. (௰)

நடந்துகொள்ளுநோயாளிராஜாவாக நாட்டினாலவர்க்கங்கே மருந்தானது, தொடர்ந்துமேயவரிடத்திற்பத்திவைத்தால் துரும்பாகப் போகுமடாநோய்களேது, அடர்ந்துபோயவர்வாசற் காத்த் தாரணைஞ் அக்கினியிற்பஞ்சதுபோல்நோய்கள்போகும், சடந்தனக்குநோய்வந்தால்குருவேயென்பார் சாதுரியமாய்த்தீர்ந்தல் தப்பிதானே. (௰௧)

தப்பியென்பார் நோயெல்லாந் தீர்ந்தபின்பு தாய்தந்தைகுருவென்பார் திருமுன்னே, வெம்பியதோருரோகங்கள் தீர்ந்தபின்பு வேணவுப்சாரம்பின் னுகட்டென்பார், கும்பியேகொதித்துமிக வுள்ளம்வாடி குருவானவயித்தியர்தன்மனதுநொந்தால், சப்பியேமுகம் வாடித்தான்வாரார்கள்சாற்றினேன்இவையறிந்துமருந்தவாங்கே.()

வஞ்சமற்ற சொன்றபிணியாளர்தம்மை மகவதிலும் பதின்மடங்குமருந்துசெய்யில், நெஞ்சில்நோயாளியின் பிணிநிதானம் திருத்தும் அந்தவயித்தியர்க்குநிதிகொடாயல், பஞ்சைமொழி பகரும்அரும்பாவியோனைப் பாழ்நரகிலழுத்தியெமன் பாசத்தாலே, அஞ்சயிழுத் தேயடித்துத்தள்வாளென்று அகஸ்தியரும்முந்நூலி லருள்செய்தாரே. (௰௫)

## பிண்டவுற்பத்தி.

கேளப்பா மகாமானவாயுகூடிகெடியான சித்தமாகாயம்போக்கி, வேளப்பா ஆங்காரசிகாரமிஞ்சி மேவதற்குப்பெண்மேலே மோகம் ஆகும், நாளப்பா ஐந்தக்கும் பலமேதென்றால் நலம்பெறவே சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு, தானப்பாமனதோடே வியானன் கூடும் தனியான நாதத்திலபானன்தானே. (௧௪)

தானென்றவிந்துவிளிற்சமானன்கூடும் தனியானசித்தத்தில்வியானன்கூடும், கானென்ற ஆங்காரம்கர்ச்சிப்போடே சலந்துதிற்கும் உதானனப்பாகண்டுகொள்ளு, வேனென்றபத்தும்ஒன்றாய்மனதுடன் கூடி மேவியவன்கலந்துவிந்து விழுகும்போது, மானென்றமௌன பரவசமேயாவன் மருவுகின்றபெண்ணுக்கும்முறைதான்கேளே ()

## கருதரிக்கும்விதம்.

முறையானபெண்ணுணும்மௌனம்உற்றால் மோசமில்லைகருவக்கேதரிக்கும்பாரு, நிறையானவலத்தோடிலாணேயாகும் தேராகஇடத்தோடிற்பெண்ணேயாகும், உறையானகருப்பையில்சுக்கிலம்பாய வுத்தமனேசுரோணிதந்தானுறைந்துகொள்ளும். சறையாகப்பாய்ந்தவெளி தமருபோலக் சுழற்கொடிக்காய்ப் போற்றிரண்டு சிரசும் ஆமே. (௧௬)

ஆமப்பாசிரசோடே கையுங்காலும் அப்பனேசத்துவங்கள் நரம்புமூளை, ஓமப்பா அஸ்திமுதலுரோமத்தோடு வுத்தமனேடதிரெருவாசலுமேகாணும், காமப்பால்விழுந்தவழிசிரசினாலே கைமுறையாய்த்தாயுண்ட அன்னஞ்செல்லும், சேமப்பாநடுமையத் தொப்புளாலேசென்றதெலாமலயாகக்கழியுந்தானே. (௧௭)

தானென்றபதினொன்றாற் சடந்தான் முன்னேசாதகமாயெடுத்துவரும்மலமெவ்வாறு, வுனென்ற பெண்ணுக்கு மனது வேறாய் உருக்கமுற்றமௌனம்உண்ணப்பாவத்தாலே, காமென்றமலடாவள்புருஷனுக்குங்கைமுறையாயிப்படிதான்கண்டுகொள்ளு, தேனென்றமொழியாட்குப்பரனார்சொன்னார்செகமெல்லாமிப்படிதான் செனித்தவாறே. (௧௮)

## தசவாயுகளின்பெயர்-பிராணவாயு இருப்பிடம்,

பிலத்துநிற்கும்பிராணனோடபானனென்னும்வியானன் பிரியாத விதானன்சமானனொடுகூர்மன், நலத்துகின்றநாகனெழிற் கிருகான் றுடனும் நற்றேவதத்தனொடுதனஞ்சயன்பத்தாகும், இலக்கமுடன்

பிராணநிலை மூலத்திற்றோன்றி யெழுந்துசிரசளவுமுட்டி யிருவிழி யின்கீழாய், கலக்கமறநாசிவழியோடும்நாரதில் தடிகியெட்டுவெட்டு குந்துகழியும்ஓர்நான்கே, (௰௯)

அபானன்-வியானன்-உதானன்-சமானவாயுகள்.

உந்தியெனுந்தலத்தின்கீழபானன்நின்று உறுமிமலசலங்களை யுந்தழலச்செய்யும், விந்தையெழில்வியானன்தோ ளதனில்நின்று நிகக்களையுந்தவனமும்உண்டாகச்செய்யும், பிந்தஉதானன்செயலு ண்டசனந்தன்னைப் பெருநாடிநாய்ப்புழியூட்டல்செய்யும், இந்தவு டல்தனைவளர்க்குஞ்சமானன்தானு மியாவையுமேமிஞ்சமெவாட்டாகி ருக்குமென்றே, (௨௰)

கூர்மன்-நாகன்-கிருகான்-தேவதத்தன்-தனஞ்சயன்-வாயுகள்,

கூர்மனிருவிழியில்நிமைத் திடுமேநாகன் கொட்டாவிவிக்கலெ னுங்கொடுமைசெய்யும், தீர்மைகிருகானிட்டிமுடக்கிவைக்குந் தே வதத்தன்விழித்துமே வசனஞ்செய்யும், பேர்மன்னுந் தனஞ்சயன் மேற்சிரசிரண்டாய்ப் பிளந்திடும்போ ததுவேவாடிப் போவதாகும், நேர்மையறிந்திடுவையினி நாடிபத்தின் நிலைமைதெரிந்திடவிபாம் உரைசெய்வோமே, (௨௧)

தசநாடிகளின்பெயர்கள் -சுழிமுனைநாடி-இடைகலை-பின்கலை.

சுழிமுனையாம்இடைகலைபின்கலைகாந்தாரிதாயத்திசிக்குவையலம் புடைபுருடன்குருனும், நெழுகுகுதன்சங்கினியோடீரைந்தாக நின்ற தசநாடிபத்தும் நிலைத்தநாமம், மொழிவதுகேள் சுழிமுனையென்ப துமூலத்தில் முளைத்துநடுவெழுந்துசிர சளவும்நிற்கும், பிழிவழிய ச்சுழிமுனையிற்கலைகள் தோன்றிப்பிறந்துஇருநாசியிடப் ஓடி நிற்கும்

காந்தாரி-அத்தி-சிக்குவை-அலம்புடை

புருடன்-குருநாடிகள்,

கண்டபதில்நின்றுகாந்தாரிநாவில் கலைந்தநீர்பொசியவுபா ய ங்கள்செய்யும், அண்டசெவிதனிலத்திசிக்குவைநின்றுஅவத்தையோ ர்நான்கினுக்குய்வுஎன்னும்; விண்ட அலம்புடைபுருடன்இருவிழி யில்நின்றுமெய்மறந்தபோதுஅசைவாகிநிற்கும், கொண்டகுருநா டியிரடிப்பற்றிக்குடல்புரட்டிவாயினீர்சுழற்றிநிற்கும் (௨௫)

### சங்கினிநாடி-விடையம்-ஐந்தின்பெயர்கள்.

### வர்ணவிடையம்.

சங்கினியென்பதுநாபிகுய்யம்பற்றித் தானிருக்குமொன்றை
யுமேமிஞ்சொட்டாமல், அங்குப் அதிகாரியனுடைய்பதிதொன்றும்
அறிவித்தோம்வசனதி யைந்தங்கேளாய், இங்குவசனங்கமனந் தம்
னதிதோடு இருந்தவெழில்விசர்க்கம் ஆனந்தம்ஐந்தில், பொங்குவச
னதியவன் வாக்கில்நின்று பொருந்தவசனத்தையவன் பிறப்பிப்பா
னே. (உ௪)

### வியாதிகளை அஷ்டவிதப்பரிசைஷகளாலும்
### நிச்சயித்தறிதல்.

தானியுள்ளவியாதிதலை பஷ்டாங்கத்தால் தானறியவேண்டும
துவதேதென்னில், திரணிபதோர்நாடிகண்கள் சத்தத்தோடு தேக
த்தினதுபரிசம்விரனம்நாக்கு, இரணமலம்மூத்திரமாம் இவைகளை
ட்டும்இதப்படவேதான்பார்த்துக் குறிப்புங்கண்டு, பாணருளாற்பெ
ரியோர்கள்பாதம்போற்றிப் பண்புதவறுமற்பண்டி தஞ்செய்வீரோ.()

### நாடிகள்நிற்கும் இடங்களும்வாதநாடி நடையும்வருதலறிக.

செய்கின்றநாடிபெருவிரலின்மேலாய் திருந்திழைமூன்றங்கு
லத்தினடுவதாகத், தைகின்றகோதும் பையரிசிபோலச் சர்வம்வியா
பித்திருக்கும் அதுதான்கூறில், கையடியுங்காலடியும் நாடிநிற்கும்
கன்னியருக்கிடப்புறமாங் கணவர்க்கங்கே, மைகின்றவலப்புறமாம்
வாதநாடி வந்துமுன்னேநடக்கும் அப்பால்வகைசொல்வேனே(உ௬

### பித்தம்-சிலேட்டுமம்-வாதம்-நாடிநடைகள்.

சொல்லுகின்றபித்தநாடிதோற்றும் அப்பால் தொடர்ந்துசிலே
ட்டுமநாடிதோன்றும்அப்பால், அல்லுநிறக்குழலாளே நாடிநின்றால்
ஆச்சரியநாடியென்றறிந்துசொல்லு,மல்லுகின்றவாதத்தில் நாடியங்
கே வக்கிரகதியாய்நடக்குந்தவளைபோல, நல்லுகின்ற மாமியட்டை
தொட்டிலாட்டல் நல்லாயிப்படிநாடி நடக்குந்தானே. (உ௭)

### பயித்தியநாடி நடை-சிலேட்டுமநாடி நடை-வாதமும்
### பித்தமும் தொந்தித்தநாடி நடை.

நடக்கும்பயித்திபஞ்சவலைப்பிள்ளைபோலும் நடனமயில்அன்
னம்போற்காகம்போலும், கிடக்கும்சிலேட்டுமநாடி இலங்கும்பக்ஷி

செய்யபுரூவூர்க்குருவிகோழிபோல, அடக்கமாய்நடக்குமதுயய சொன்னேன் அவ்வளவேவாதபயித்தியத்தின்தோற்றம், மடக்கின்ற காடைபோல்நடந்தப்பின்னை மஞ்ஞைநெயனநடக்குமது மதிக்கக் கூறே (௨௮)

வாதசிலேட்டுமந்தொந்தித்தநாடி
அசீரணநாடி மதீரிதபநாடி ஸ்திரீசங்கநாடி
மலபந்தநாடி. சன்னிவாதநாடிகளின் வருகை.

கூறுகின்றவாதசிலேட்டுமமூக்கூடில் கோழியட்டையெனநடக்கும்அசீரணநாடி, தூறுகின்றமதீரிதபத்திநடி தூக்குகின்றகாகநடையென்றுசொல்வார், தேறுகின்றஸ்ரீசங்கைஇப்படியாய்நின்றதிபரமாய்நடக்குமலபந்தநாடி. ஊறும்அன்னம்போல்நடக்குஞ் சன்னிவாதம் உயர்நாடிவிதிகளையும்உலாக்கக்கேளே. (௨௯)

குடிலை-சூட்சுமவாயு-சன்னிவாதம்-சங்கினி-காந்தாரி
நாடிகளின் நடைகளறிக.

உரைத்தவிறகின்கட்டுக்குள்மூஞ்சூறுஉலவுதல்போலேநடக்குங்குடிலைவாயு. விரைத்தெழுந்தமர்தமாயிருந்தபின்னும் விதமாகநடக்குமதுசூட்சுமவாயு,புரைத்தருமைஇவ்வகையின்சன்னிவாதம் பொருட்பாகக்குவிந்தமூலைபோலுங்கொங்கை, மூரைத்தெழுந்த சங்கினிகாந்தாரிபின்னே மூறைமையதாம்நாடியெனமுனிவர்தாமே.

தேகக்களின்பரிசங்களுந்திறங்களும்வருங்குறியறிதல்.

மூனைகின்றதேகபரிசத்தைப்பார்க்கில் முன்வாதத்தேகிக்குச்சரீரஞ்சற்றே,அனைகின்றஉஷ்ணமாம்பயித்தியதேகிக்கதிகமுண்டாம் அப்பால்சீதளமாய்நிற்கும், சுனைகின்றசிலேட்டுமந்தான் சூழ்தேகிக்குத் தொந்தகுணம்நால்விதமாய் நிறந்தான்கூறில்,பனைவாதத்தேகநிறங்கறுத்துநிற்கும் பயித்யதேகநிறமஞ்சள்சிவப்பதாமே. (௩௧)

சப்தலக்ஷணம்.

தாமேசிலேட்டுமதேகநிறம்வெளுப்பு தான்தொந்தத்தேகம் இந்நால்விதமாய்நிற்கும், மாமயிலைசத்தமது அறியவேண்டில் வாதரோகிசமதொனியாய்வார்த்தைபேசும், ஈமமுள்ளபித்தந்தான் உறக்கக்கூறும் இயம்பிடுஞ்சிலேட்டுமரோகிக்கினச்சத்தம், நாமுரைத்தோம் தொந்தரோகிக்குத்தானிந் நால்விதமாய்மொழிந்தசத்தம் நபந்துகாணே. (௩௨)

காணுகின்றவாதரோகிக்குக்கண்கள்கருநிறமாய்த் தொந்துமிகத்தண்ணீர்பாயும். பூணுகின்றபித்தரோகிக்குமஞ்சள்போலிருக்கும் சிவப்புநிறம்பொலிவுதோன்றும், பேணுகின்றசிலேட்டமரோகிக்குக்கண்கள்பீளைகட்டிவெளுத்திருக்குஞ்சன்னிவாதம், வாணுகின்றசிவப்புடைத்தாய்வந்துவீங்கி வந்திடுங்காமாலையெனவகுத்துச்சொல்லே. (௫௩)

வாதமலம்-பித்தமலம்-கபமலம்-தொந்தமலம்

வாதச்சிறுநீர் நிறங்கள்

வந்தமாவாதரோகிக்குத்தானும் மலமிறுகக்கட்டுபட்டுக்கறுத்துத் தோன்றும், சிந்துபித்தரோகிமலம்மஞ்சளாகில் சிவப்பாகில்சேர்ந்திருக்குஞ்சிலேட்டமருக்கு, சொந்தமலம்வெளுத்திருக்கும் மலங்கட்டானத்தொந்த மலம்பலவிதமாய்த்தோற்றிக்காணும்,விந்தமுளவாதரோகிச்சிறுநீர்தானும் வெளுத்திருக்கும்பயித்தியர்நீர் விதஞ்சொல்வேனே. (௫௪)

பயித்தியர்சிறுநீர்-கபநீர்-தொந்தநீர்

வாதரோகநா - பித்தரோகநாவு நிறங்கள்.

விதமுள்ளபயித்தியர்தன்சிறுநீர்மஞ்சள் விதமுடைத்தாயிருக்குமல்லால்சிவப்புந்தோன்றும், நுரையுள்ளசிலேட்டுமத்தோர் நீர்தான்மொத்தநுரைகலக்குந்தொந்தநீர்நால்விதமாய்க்காணும், சுவையுள்ளநாவிநிறஞ்சொல்லில்வாதந் தோன்றினர்க்குவெடித்துமுட்போற் கறுத்திருக்கும், கசையல்லச்சிவந்தாலும்பசித்தாலுந்தான் கணமுள்ளபயித்தியர்நாகணக்குத்தானே. (௫௫)

கபரோகநாவு-ஜன்னிரோகநாவு-தொந்தரோகநாவு.

தானமொவோய்வெளுத்துநீருண்டாகிற் றுன்சிலேட்டமநாவாகும்சுரம்அற்றே, ஆனமுற்போற் கருக்கில்சன்னிரோகநாவாம் அதமதொந்தநாநிறம்நால் விதமாய்த்தோன்றும், ஆனஇவ்வகையெட்டும் அறிந்தபேரை அவனிதனிற்பண்டிதராயறியச்சொல்வார், ஈனம்இலாப்பொறி-டக்கும்பெரியோரன்றியெய்தாதுயாவருக்கும்இயம்புங்காலே

அகஸ்தியமகாமுனிவர்

அருளிய

வயித்தியசாரம்

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

# அகஸ்தியமகாமுனிவர்.

அருளிய

## நோயின்சாரம் - ௫௭.

### விநாயகர் துதி.

கரிமுகக்கடவுளை கௌரிமைந்தனை
விரிசடல்வாயனை வேதவேதாந்தனை
அரிதருமருகனை யாதிசோதியை
பரிவொடுதொழுதவர் பாதம்போற்றுவாம்.

### மாதங்களில்நாடிபார்க்குங்காலங்களறிதல்.

சித்திரைவைகாசிக்குஞ் செழுங்கதிருப்பிற்பார்க்க, அத்தமாம்ஆனியாடியைப்பசிகார்த்திகைக்கும், மத்தியானத்திற்பார்க்கமார்கழிதைமாசிக்கும், வித்தகக்கதிரோன்மேற்கே வீழ்கும்வேளையிற்றன்பாரே.

தானதுபங்குனிக்குந் தனதுநல்லாவணிக்கும், வானமாம்புரட்டாசிக்கும்அர்த்தராத்திரியிற்பார்க்க, தேனெனமூன்றுநாடி தெளியவேகாணுமென்று, கானமாமுனிவர்சொன்ன காரிகைவேதநூலே. (௩)

### நாடிபார்க்கிற் பலித்திடாகாலமறிதல்.

எண்ணெயின்தலையின்போதும் ஈரமாய்நின்றபோதும், உண்ணும்நல்லுணவின்போதும் உண்டாம்வெம்பசியின்போதுந், திண்ணமாய்நடக்கும்போதுஞ் சிற்றின்பமூட்டும்போதும், பண்ணியநாடிபார்க்கிற் பலித்திடாதென்றுசெப்பே. (௪)

### நோய்நாடிபார்க்கும்விபரமறிதல்.

மருவிடுநோயினாடிமதித்திடில்வலக்கையாமந்தர்க்,கரிவையர்க்கிடக்கைதன்னிலழுத்தியேசுட்டிக்காட்டும், விரலதில்வாதமாகும்மிகுநடுவிரலிற்பித்தந், கருமணிவிரலில்ஐயந்தானியல்பதிந்துபாரே. (௫)

வாதமும்பித்தம்ஐயம்மருவியகுணபாடத்தை, நீதமுனிவர்நூலைத்தேர்ந்தபின்னிரட்டதாக, ஓதியசுருக்கநூலை யொழுங்கொடு வுணர்ந்துகொள்ள, வாதிதிர்வயித்தியர்க்கு வல்லிருள்விளக்கமாயே. (௬

### மந்தசுரக்குணம்.

வாதந்தான்தனித்துநின்று வந்திமேம்பந்துபோலத், தீதறஎழும்பிநின்றாற் சிக்கியேமந்தம்பற்றும், ஏதுவாற்சுரங்கள்கண்டவிடைவிடாதிற்குமல்லாற், றுதுவுங்குறைந்துநின்றுதன்னையுமறக்கச்செய்யும். (எ)

### மத்தியசுரம் மலைச்சுரங்களறிதல்.

உற்றிமேம்வாதநாடி ஒருவிரல்ள்ளேநின்று, பற்றியேசிறும்பிறின்றவையவேநடக்குமாயின், மத்தியசுரமேயாகும்மலைச்சுரமதுநாளுயின், அத்திபேபற்றியோடியடங்கிடாதெழும்பிதிற்கும். (அ)

### சகலசுரங்களும் பாஷாணத்தாற்றீரும்.

இப்படிசுரங்கள்கண்டாலெளிதல்லவேகமுண்டாம், அப்பறநாவறண்டந்நாவினிற்பிளப்புக்காணும், வெப்புறமிச்சுரங்கள் மேவிடாதகலவேண்டில், மெப்படிப்பாஷாணத்தால்தீர்வதுதின்னந்தானே,

### வனமூலியாமும்-மாத்திரை-கற்கம்இவைகளாற்றீரும்.

நாட்டினிற்சுரங்கள்கண்டுநலம்படாதிருக்குமாயிற், காட்டினில்மூட்டியாலுங்கஷாயத்தின்வலிமையாலும், மூட்டியகுளிகையாலும்முடியகற்கத்தாலும்; வாட்டமாமென்றுநூலோர்வழுத்தியகுணமீதாமே.

### மலபத்தநாடி.

வந்திடும்வாதநாடிமடக்கியேதுடித்துநிற்கில், முந்தியபழமலங்கள் முடுகியேசிக்குமென்க, அந்தமாய்வாதந்தம்பித் தமிழ்ந்துநின்றசைக்குமாகிற், பந்தியாய் வயிற்றெதிப்பும் பரப்புமலந் தமித்த தென்னே. (௰௧)

### மந்தசன்னி.

நீருறும்வாதநாடிநின்றதிற்கோபமானாற்,பாரினிலெவர்க்கும்வாயுபற்றிமேமந்தமாகும், வேரிசேர்குழலாய்வாதம்விரிப்பொருளெடுத்துநின்றால், கூறுறுசன்னிவந்துகூடிமூன்றுநாளில் (௰௨)

### மேற்படி சன்னிதிர அண்டத்தயிலம்.

வந்திடுமூன்றுநாளில் வாதமாஞ்சன்னிகூடிற், புத்தியைமறந்துவாபாற்புலம்பலோடலம்பற்பண்ணும், பிந்தியநாலாநாளிற் பிடரியிற்பின்னல்செய்யும், அந்தமாகியஅண்டத்தின்தயிலமேபுகற்றிடாயே ()

### தோஷக்குறியறிதல்.

பாவியவாதநாடிபக்கமேதுடியாவண்ணம், புரவியபுழுப்போலூர்ந்துபுலன்கெடவமர்ந்தேயோடில், சாமுறும்வேழாநாளிற்றோஷம்வந்தணுகிநாவை, யுரமுறப்பேசவொட்டாதுளரியேகுளரிநிற்கும். (௰௪)

### மேற்படி தோஷந்தீர-மயிலிறெனய்.

பேச்சதுகுளறிநின்றுபெருகவுள்மூச்சமுண்டாம், ஆச்சுபன்னிரண்டுநாள்தானப்படிகிடக்கிற்பின்பு, கூச்சறமயிலிறெனய்யிற்குலவியவசம்புகூட்டித், தேய்ச்சுமேலுள்ளுங்கொள்ளத்தோஷமுஞ்சிதைந்துபோமே. (௰௫)

### வாதமெலிவு தோஷம்.

வாதமேமெலிந்துவிம்மிவறண்டது புரண்டுகத்தி, சேதமாயரணைவால்போல்சிக்கிமேயதுடித்துநிற்கில், வாதையேபெருகிமேவில்வந்திடுந்தோஷந்தானென், றோதினோர்முன்னோரிந்த வுகமையைக்கண்டுசொல்லே. (௰௬)

### சர்வாங்கவாதசன்னிக்குணம்.

கூறிட்டவாதநாடிகோழிபோற்கிண்டிநின்றால், வாரிட்டமுலைநல்லாளேவாதமாஞ்சன்னியாகும், டேரிட்டெடுத்தெடுத்துப்பிரப்படத்தியங்குமாகில், ஆரிட்டதேகத்துண்டாம் அதுசருவாங்கமாமே. (௰௭)

### மேற்படி நோய்தீரமருந்து.

பதறியவாதநாடிபாய்பரிபோலவோடிற், சிதறிடமூன்றுநாளிற்சேர்ந்திடுங்குதிரைவாலி, மதறிடாய்த்தொண்ணூற்றுறு நாழியில்மரிக்காவிட்டால், விதறியாய்வேம்பினெண்ணெய்விஷமுட்டித் தயிலங்கூட்டே. (௰௮)

### வாதக்கதிப்பால்வருநோய்கள்.

வாதமேகதித்தபோது வாயுவும்எழும்புங்கண்டீர், வாதமேகுதித்தபோதுவந்திடுஞ்சன்னிதோஷம், வாதமேகதித்தபோதுவந்திடும்வியாதிமேலும், வாதமேகதித்தபோதவல்லுடல்மெலிந்துக்கொல்லும்,

### இருநாழிகையிலும்ஒருநாழிகையிலுஞ்சாக்குறி.

மந்தமாய்வாதநாடிமயிலருப்பேன்போலோடில், இந்தமானிடர்க்கிரண்டு நாழிகைஇருப்புமில்லை, வந்தவன்முகமும்வேர்த்து மஞ்சளின்நிறமெய்யாகில், முந்தவோர்நாழிகைக்குள்முடிவதுதின்னந்தானே.

### தனிவாயுநோயும்வலிகுன்மமும்மரணமும்வருங்குறி.

வாதந்தான்றனித்திருந்திற்கில்வாயுவுந்தனித்திருக்கும், வாதந்தானுந்திரிந்திற்கில் வலிகுன்மம் வந்துசேரும். வாதந்தா னற்றுநிற்கில் மரணமும்வந்துசேரும், வாதத்தின் றிரட்ட தெல்லால் இவ்வகை வடிவுதானே. (௨௧)

### கர்ப்பந்தரித்தநாடிக்குணம்,

காரிகை தமக்குப்பிள்ளை கருப்பையைப் பற்றி நின்றாற், கூரிய வாதநாடி குண்டலப் புழுப்போலூரும், வீரிய மூன்றுந்திங்கள் விட்டில்போற் பதைத்துநிற்கும், பாரியவெட்டாந்திங்கள் பையவே புழுப்போலூரும். (௨௨)

### கர்ப்பந்தரித்தநாடிக்குணம்.

மாதர்கைப்பிடித்தபோது வந்திடும்வாதநாடி தீமுற வெடித்துப்பாய்ந்து சிதறிடே சிலும்பிநின்றாற், பேதைதன் வயிற்றினுள்ளே பெருசுசுரோணிதமேதங்கி, வாதைகள் பண்ணிமாத விடைகாலம் வருத்தஞ்செய்யும். (௨௩)

### கர்ப்பந்தரிக்கக்குழம்பு.

இடுப்பொடுமேடுத்துநொந்து இடைவிடாக்குத்தலுண்டாய், தடுத்திடாக்கர்ப்பந்தன்னைத்தங்கிடாவண்ணஞ்செய்யும், அடுத்ததோராவினெய்யி லானதோர் திருகுகள்ளி, கொடுத்திடாத் துமட்டிக்காயின் குழம்பதுகொடுக்கத்தங்கும். (௨௪)

### குதகத்தில்வாயுதங்கிடகுணம்.

மாதர்கைப்பிடித்தபோதுவந்திடுநாடிமூன்றும், சேதமாயிற்று நின்று சேரவேபதிந்திருக்கில், ஓதுமேகுதகத்தி லோங்கிய வாய்வே நின்று, பேதமாய்வாதைபண்ணி பிணிகளைவிளைக்குந்தானே. (௨௫)

### எரிகுன்மவரலாறும்திருமருந்தும்.

வாதமும்பித்தங்கூடிவன்பெலத்துடனேயோடிற், தீதருவயற்றினுள்ளே திரண்டதோர்மந்தம்பற்றி, வேதனை யெரிப்புங்கூடி விரண்டிடும் எரித்தகுன்மம், ஆதிசேர்சீனிகூட்டி அஷ்டகு ரணந்தான்கொள்ளே. (௨௬)

### குலைநோய்வரலாறு.

இருத்தமாய்வாதத்தோடே தீங்கொடுபித்தஞ்சேரிற், பொருப்புகள் தோறும்நொந்து போதவே பிடிக்குங்குலை, பெருத்திடா வாயுகொள்ளும் பேசிபவயிறேபோகும், கருத்திலறிந்துநன்றாய்க் [?] கடைடாய்மனிதர்க்கெல்லாம் [?]. (௨௭)

### காலன்பிடிக்கும்நாடி.

அரவின்றன் நாவைப்போல அடிக்கடிபதறிவாதம், உரம்பெற நின்றுபித்தம் ஓடியே யொளிக்குமாகிற், திரும்பிடாக் காலன்றானே தீங்குடன்பிடித்தானென்று, வரம்பெறுமுனிவர்தானும் வாக்கொடுசொன்னார்தேர்ந்தே. (௨௮)

### மூலாதாரவாதையாற்சாதலும்பயித்தியம்பிடித்தலும்அறிதல்.

பிறந்திடும்பித்தநாடி பிரண்டுமேதிற்குமாகில், வறண்டிடும்மூலாதாரம் வாதையால் மடிவுசெய்யும், கறண்டது பித்தநாடி கதிப்பொடு அடித்துநின்றால், அறண்டிடும் பயித்தியந்தான் அடைவொடு வந்துகூடும். (௨௯)

### பேச்செழும்பலும் அடங்கலும்குளறலும்வருதல்.

உற்றிடும்பித்தநாடி யொழுங்கொடு எழும்பிநின்றால், வற்றிடாப் பேசுகின்ற வசனமுமெழும்பிநிற்கும், மத்திமப் பித்தநாடி மடங்கியே அடித்துநின்றால், உத்தமப் பேச்சுதானும் ஒடுங்கிவாய் குளறிப்போகும். (௩௰)

### பயித்தியநோய்வரலாறும்-தீருமருந்தும்.

பித்தமாம்நாடிதானே பெலத்தொடு தசித்து நிற்கில், மத்திமப் பயித்தியத்தை வளர்த்திடும்வறட்சிசேரும், உத்தமமூளைதன்னில் உருகியேகுறைந்துநிற்கும், சிற்றாமுத் தாடும்எண்ணெய் சிரசிற்றேய்த்துறப்போமே (௩௧)

### கிறுகிறுப்புத்தீர்க்கிபாழம்.

உதறியேபித்தநாடி உழுவைபோற்றுடித்துநிற்கிற், பதறியேயுடம்பழுத்தும் பாய்ந்திடுஞ்சிறுநீர்வற்றும், முதலியபுத்திமாறி கிறுகிறுத் தழலேயுண்டாம், திவ்விய பயறும் பச்சை நெல்லிக்காய் கியாழங் கூட்டே. (௩௨)

### சுரத்தொடுகபாலக்குத்து வரலாறுந் தீரும்புகையும்.

நடுவிரற்பித்தமற்று மந்தமாய் நடக்குமாகில், வடிவுளவுடம்பழுத்தி மந்தித்துச் சுரமுந்தோன்றி, யிடியிடித் ததுபோலோடிச் சிரசிலிடித்துக்குத்தும், படிபவே சாதிலிங்கப் புகையுண்ணப் பறந்துபோமே. (௩௩)

### வறட்சிசுரம்பிரமேகம்வரலாறு.

வளர்ந்திடும்பித்தநாடி வலமிடப்பிசகாவண்ணம், பிளந்ததுதனித்துப்பச்சைப் புழுவுடங்கதுபோலோடில், உளந்தனில் வறட்சிதங்கியுடம்புலர்ந் தல்திதன்னில், வளர்ந்திடுஞ் சுரங்கள்வந்து வளர்பிரமேகமாமே. (௩௪)

### மஞ்சள்நிறநீர்க்கடுப்புடல்தளர்ச்சிதிரவக்கபர்பம்.

சலநிறம்மஞ்சள்போலாய்க்கடுத்திடுந் தளர்ச்சிசெய்யும், உலவிய மூன்றுமாதம் பழகிற்பின் னுடம்புதன்னிற், குலவிய வக்கபர்டன் கொடுக்காமனூறுமாகில், விலகிடாச்சூலைவந்து வெடித்துபுண் ணுகு மென்னே. (௫௫)

### பித்தத்தாலுண்டாகுநோய்கள்வருதலறிக.

பித்தமேதனித்தாற்கூடு பெலத்துடனுலாச்செய்யும். பித்தமே மிகுத்தாலின்னை யிருமலும்பெலத்துநிற்கும், பித்தமே யிகுத்தானூற் பெலன்குறைந்துடம்பழுத்தும், பித்தர்மதிரட்டி நாலிற்பேசினர்பெ ரியோர்தாமே. (௫௬)

### பெருவாதம்உதரவாயுபயித்தியமுதலான்பிணிகளுற்பவித்தல்.

பித்தமேகதித்தபோது பெருத்திடும் வாதமுண்டாம், பித்தமே கதித்தபோது பெருத்திடும்வயிற்றில்வாயு, பித்தமேகதித்தபோதுபி தற்றிடும்பித்தேசேளு, பித்தமே கதித்தபோது பிறந்திடும் பிணிய னேகம் (௫௭)

### சன்னிவாதம்பினற்றல்பிய்த்தல்நினைவிழப்புவருதலை.

பித்தந்தான்வாதத்தோடுபிணைந்துநேர்தோன்றுமாகில், மற்றிய சன்னிவாதம்வந்திடும் பினற்றலுண்டாம், உற்றிடும் வாதத்தோடு வுற வதாய்ப் பித்தமீறில், நித்தமும் பிதற்றிப்பேசி நினைவிழந் திருப்ப னென்னே. (௫௮)

### க்ஷயநோய்கள்தீரமருந்தும்க்ஷயரோகமும்வரலாறும்,

முற்றுமிக்குணங்கள்கண்டால் முயிறதன்முட்டைதன்னை, சத்த பப்பாலினோடுங்கலந்தருந்திசமாம்பின்பு, பித்தத்தானையத்தோடுபெ ருமுகந்திரும்பிதிற்கில், மத்திபக்ஷயரோகத்தை வாவென வழைக்குந் தானே. (௫௯)

### நீயும்விடாதசுரமுங்காணுங்க்ஷயரோகந்தீரகுக்கிலாதி.

### நெய்யுஞ்சாறும்.

இருமியேசியுங்வீழ்ந்து இடைவிடாச்சுரமுங்காயும், பருவமாய் நெஞ்சில்பற்றி பதறியேயிரத்தம்வீழும், குருநிலை குக்கிலாதி நெருகர் தாற்குடிபோம்பின்பு, வருநெரி கண்டந்தோனட வளையத வினாக் கொள்ளே. (௬௦)

### அசாத்தியசுரநாடிக்குறியறிதல்.

அய்யமாம்நாடிதானே யானைவாலாற்றுநேர்ந்து, பய்யவேமந்த ம்பற்றிபதறிடா திருக்குமாகிற், செய்வதொன் றில்லாக்காலன் தேடு வதுண்மையென்று, கையினைப் பிடிக்கவேண்டாங் கழற்றித்தொண்ட ப்பார்செல்லே. (௬௧)

இருமலீளையிளைப்புகோழைமதீர.

உந்திடும் ஐயநாடி யோங்கியே நடிக்குநின்றால், பந்திடும் இருமலீளைப திபேயிளைப்புண்டாகும், மெத்தவே கோழைவாயு மிகுத்திடில் கற்கதித்தோடு, சுத்தமாய்த் தாதுவேளை தோஷடமாகக் கண்டங்கூட்டே. (௪௨)

தொண்டையுநெஞ்சுங்கட்டிமழைகாலத்திலுபாதித்தல்.

நிரக்குக்கிலாதிநெய்.

இரமொடு இருதிநாடி இளகிடா திருந்துநின்றால், பதமொடு தொண்டைகட்டும் பழுத்த நெஞ்சதனிற்கட்டும், விதமொடு மழைநேரத்தில் மிகுதியாய்வாதைபண்ணும், நிதியெனக்குக்கிலாதிநெய்யினால்மாறுந்தானே. (௪௩)

பீனசம்மூக்குநீர்ப்பாய்ச்சல் மண்டைச்சீலை.

தலைகனப்புத்தீரநண்டுநெய்.

ஒடுக்கமாஞ்சிலேட்டுமநாடி பொழுங்கொடுபதறிநின்றால், நடுக்கமாம்பீனசங்கள் நாசிநீர்ப் பாய்ச்சலாகும், பிடித்திடும் மண்டைச்சூலைபெருத்திடுந்தலைகனப்பு, தடுத்திடும் நண்டுநெய்யைத் தலையினிற்றப்பத்திரும். (௪௪)

ஓர்பகலுக்குள்ளிறக்குநாடிக்குறி.

மத்திபஐயநாடி மந்தித்து வுழன்றுநின்று முத்தியசசல்போல முடிகியேபதறுமாகில், நித்தத்தோர்பகலுக்குள்ளேநில்லாதுமரணம் வந்து, சுத்தியேமரிப்பனென்னச்சொல்லுவார்நல்லோர்தானே (௪௫)

குற்றங்கோழைவாயுமரணநிச்சயக்குறி.

சிலேட்டுமநாடிதானே தெளிவொடுநிற்கிற்றீதாம், சிலேட்டும மந்தம்பற்றில் சேர்ந்திடும் கோழைவாயு, சிலேட்டும மிகுந்துநின்றால் செப்பிடும்மரணந்திண்ணம், சிலேட்டுமத் திட்டமெல்லாந் தெளிவொடுகண்டுகொள்ளே. (௪௬)

சாகக்குறியறிதல்.

ஐயந்தான்பித்தந்தன்னை யணைந்தெதுத்தேறுமாகில், நய்யவோர்நாளிற்காலன் நாடியேவருவதுண்மை, பய்யவே ஐயம்பாய்ந்து வாதத்தைப் பற்றிநின்றால், செப்பிடும்வாறென்னசாவோர் நாழிகைதிண்ணந்தானே. (௪௭)

வியாதிதோஷம்ஐயசன்னிமரணங்கள்வருதலா.

